# IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

**OS No**. 75/2022 **Date**: 23.07.2025

**PW**1 - செங்கோட்டையன்

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை

நான் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளேன். நான் 2018 ஜனவரியில் ஓய்வு பெற்றேன். பிரதிவாதியும் என்னுடன் சங்ககிரி பணிமனையில் நடத்துநராக பணியாற்றி வந்தார் என்றால், சரிதான். பிரதிவாதி நான் ஓட்டுநராக பணிபுரிந்த அதே பேருந்தில் திருச்செங்கோட்டிலிருந்து தேவூர் செல்லும் தடம் எண் 21 ல் என்னுடன் நடத்துநராக இருந்துள்ளார் என்றால், சரிதான். அதனால்தான் எங்களுக்குள் பழக்கம் என்றால், சரிதான். நான் ஓய்வு பெறுவதற்கு 2 மாதங்களுக்கு முன்பு பிரதிவாதி என்னிடம் கடன் கேட்டேன், நான் என்னிடம் தற்போது பணம் இல்லையென்று சொல்லிவிட்டேன். பின்பு 2020 ஜனவரியில்தான் தாவா கடனை கொடுத்தேன். இதற்கு இடைப்பட்ட காலத்தில் என்னிடம் பணம் கேட்பார், அப்போது என்னிடம் பணம் இல்லாததால் கொடுக்கவில்லை. தாவா கடன் தொகையை நான் எனது வங்கி கணக்கிலிருந்து எடுத்து ரொக்கமாக வைத்திருந்தேன். அந்த வங்கி கணக்கை என்னால் தாக்கல் செய்ய முடியும். கடன் தொகையை என் வீட்டிற்கு வந்து வாங்கிக்கொண்டார். 20.01.2020 அன்று மதியம் 12.00 மணி சுமாருக்கு கொடுத்தேன். நான் எத்தனை ரூபாய் நோட்டுகள் கொடுத்தேன் என்று எனக்கு நினைவில்லை. பணம் கொடுக்கும்பொழுது வட்டார வளர்ச்சி அலுவலராக பணியாற்றி எனது நண்பர் உடனிருந்தார். அவரை நாங்கள் BDO என்று அழைப்பதால், பெயர் நினைவில்லை. அப்போது என் மனைவியும் உடனிருந்தார். பிரதிவாதி ரூ.4 லட்சம் பணத்தை பெற்றுக்கொண்டு ஒரு வாரம் கழித்து தேதியிட்ட ஒரு காசோலையை அப்போதே என்னிடம் கொடுத்தார். ஒரு வாரத்திற்குள் பணத்தை திருப்பி செலுத்திவிடுவதாகவும் தெரிவித்தார். மேற்படி காசோலையை தவிர வேறு ஆதாரம் எதுவும் நான் பிரதிவாதியிடம் எழுதி வாங்கவில்லை. வா.சா.ஆ.1 ஐ என் நண்பர் BDO தான் பூர்த்தி செய்தார். மேற்படி கடனுக்கு 18 சதவீத வட்டி பேசினோம். நாங்கள் பணிபுரிந்த போக்குவரத்து கழக பணிமனையில் தொழிலாளர்கள் சேர்ந்து ஏலச்சீட்டு நடந்து வந்தோம் எ ன்றால், சரியல்ல. அந்த வகையில் ரூ.5 லட்சம் சீட்டில் பிரதிவாதியும்

சேர்ந்து 9 வது சீட்டை ஏலம் எடுத்தபோது அந்த தொகைக்கு ஆதரவாகத்தான் பிரதிவாதி காசோலை கொடுத்தார் என்றால், சரியல்ல. வா.சா.ஆ.1 காசோலை வங்கியில் திருப்பப்பட்டபோது நான் உடனியாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால், சரிதான். குற்ற வழக்கும் தாக்கல் செய்யவில்லை, நேரில் சந்தித்துதான் கேட்டேன். ஆனால் 1½ வருடங்கள் கழித்துதான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால், சரிதான். நான் பிரதிவாதியை எந்த தேதியில் சந்தித்தேன் என்றால், நான் பலமுறை சந்தித்தேன், தேதி நினைவில்லை. பிரதிவாதியின் மனைவி தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரிந்தார் என்றால், சரிதான். அவர் 2020 முதல் உடல்நிலை மோசமாகி படுத்த படுக்கையாக உள்ளார் என்றால், சரிதான். பிரதிவாதிக்கு போதிய வருமானம் உள்ளதால், என்னிடம் ரூ.4 லட்சம் கடன் வாங்கவேண்டிய அவசியம் இல்லையென்றால், சரியல்ல. மனைவியின் மருத்துவ செலவிற்காகத்தான் நான் கடன் கொடுத்தேன். ஏலச்சீட்டு எடுத்தபோது அதற்கு ஆதரவாக கொடுத்த காசோலையை வைத்து நான் பொய்யாக இத்தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. ஏலச்சீட்டு 2020 ல் முடிந்துவிட்டது என்றாலும், காசோலையை திருப்பி கேட்டபோது நான் அதை தவறாக பயன்படுத்தமாட்டேன் என்று சொன்னதை நம்பி அவர் வாங்காமல் விட்டுவிட்டார் என்றால், சரியல்ல. பிரதிவாதி 18 சதவீத வட்டி கொடுக்க ஒப்புக்கொண்டதாக சொல்வது பொய் என்றால், சரியல்ல. பிரதிவாதி என்னிடம் ரூ.4 லட்சம் கடன் வாங்கியதாக சொல்வது பொய் என்றால், சரியல்ல. தாவா தள்ளுபடி ஆகவேண்டும் என்றாலும், சரியல்ல.

ஒப்பம்/-செங்கோட்டையன்

ஒப்பம்/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நிதிபதி, சங்ககிரி.